**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | கருப்புசாமி |
| Father's Name/Husband Name: | ராஜ் |
| Village : | தெரணி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 57/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 2, 5, 6, 7, 9 ஆஜர் /எதிரிகள் 1, 3, 4, 8, 10 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜர் ஆகாத மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியாது. கடந்த 2021ம் வருடம் தீபாவளி அன்று ஆஞ்சனேயர் கோவிலுக்கு எனது மகள் மற்றும் மனைவி மற்றும் மகளின் தோழிகள் ஆகியோர்கள் சென்றுவிட்டு திரும்பும்போது, சிலர் அவர்களிடம் பிரச்சனை செய்ததாக இளையராஜா வந்து என்னிடம் சொன்னார். ராகுல்காந்தி மற்றும் சிலர் எனது மகனிடமும், மகளிடமும் பிரச்சனை செய்தார்கள். அந்த பிரச்சனையில் யாரோ எறிந்த கட்டை ஒன்று பக்கத்து வீட்டு சுவரில் பட்டு என் தலையில் விழுந்தது. பிறகு நான் மயக்கம் அடைந்துவிட்டேன். பிறகு 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். பின்னர் இரவு 10.30 மணியளவில் நினைவு வந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள

விபரங்கள் எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கைரேகை மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலீஸ் விசாரணையில் கடந்த 04.11.2021 அன்று மாலை 05.00 மணிக்கு எனது மகள் ஜீவிதா, தங்கை காந்திமதி, மகள் ஜீவிதாவின் தோழிகள் கௌதமி, காயத்திரி, ராஜசுதா, நந்தினி ஆகியோருடன் தனது ஊரில் உள்ள ஆஞ்சேனயர் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு வரும்போது எதிரிகள் ராகுல்காந்தி, பெரியசாமி, புகேழுந்தி, கார்த்தி ஆகியோர் பின் தொடர்ந்து சென்றதாகவும், எதிரி ராகுல் காந்தி எனது மகளின் முடியை பிடித்து இழுத்தும், துப்பட்டாவை பிடித்து இழுத்து வெடியை கொளுத்தி போட்டதாகவும், அதை தட்டிக்கேட்ட காந்திமதியை கல்லால் இடுப்பில் அடித்ததாகவும், பின்னர் எதிரிகள் ராகுல்காந்தி, பெரியசாமி, புகேழுந்தி, கார்த்தி ஆகியோர் ஒன்று சேர்ந்து கொண்டு I love you என்று சொல்லிக்கொண்டே பின் தொடர்ந்து வந்ததாகவும், அதை பார்த்த தனது மகன் சத்தம் போட்டதாகவும், பின்னர் எதிரி ராகுல்காந்தி தனது மகனை அசிங்கமாக திட்டியதாகவும், அதன் தொடரச்சியாக அன்று இரவு 7.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் அடையாளம் தெரியாது நபர்கள் சிலருடன் ஒன்று சேர்ந்து தனது வீட்டிற்குள்அத்துமீறி நுழைந்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாகவும், கட்டையை எடுத்து வீட்டின் ஓட்டை அடித்து சேதப்படுத்தியதாகவும், மேலும் அனைத்து நபர்களும் சேர்ந்து கையாலும், குச்சியாலும் அடித்ததாகவும், அதை தடுக்க வந்த சாட்சி மகேஷ்வரியை பெண் என்றும் பாராமல் அவமானப்படுத்தியதாகவும், எதிரி ராகுல்காந்தி மற்றும் மற்ற எதிரிகள் சேர்ந்து கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி மிரட்டியதாகவும் கூறிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) நான் வைத்த ரேகையை பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வைத்தது நினைவில்லை. போலீசார் ஊரில் விசாரணை செய்தபோது வைத்தேன் என்றால் சரிதான். நான் வைத்த இரண்டு ரேகைகளிலும் என்ன எழுதியிருந்தது என்ற விபரம்

எனக்கு தெரியாது. போலீசாரும் படித்து காண்பிக்கவில்லை. ராகுல்காந்தி எனது மகனிடம் பிரச்சனை செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், வேறு ஒருவர் மூலமாகதான் தெரியும் என்றாலும் சரிதான். 7ம் எதிரதி ராகுல்காந்திக்கும் என் மகனுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.